உ

சித்திராங்கிக்கும் சாரங்கதரனுக்தும் தர்க்கம்

புராப்பாட்டு.

(இரண்டாம்பாகம்.)

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமதூ

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

131

விளம்பரம்.

மணிமந்திர வயித்திய சேகரம்.

இந்நூலை சகலஜெனங்களும் சுலபமாய்
தெரிந்துக்கொள்ளலாம்.

சோதிடம், மாந்திரீகம், வைத்தியம் கற்றுணர்ந்த வல்லவர்களும், இனிகற்றுணர விருப்பமுள்ளவர்களும், கண்ணுற் கண்டுக் களித்து ஆனந்தமடையும் பொருட்டாய், மணி, யென்னும், சோதிடமும், மாந்திரீகமும், வைத்தியமும், இம்மூன்றும், பற்பலநூற்களைக்கொண்டு ஆராய்ந்து புதைநிதயம்போல் நன்றாகச் சேர்த்து தாங்கள் தாங்களே, தெரிந்துக் கொள்ளும்படியாய் வசனகாவியமாய் எழுதி, அரிச்சுவடிபோல ஒவ்வொன்றையும் தனிபிரித்து வெகுநேர்த்தியாய் அச்சிட்டிருக்கின்றது.

இதில்மாந்திரீகம் ஆரூடத்திற்கும் ஆங்காங்கு, லெத்தகிராப் சக்கரம் அமைக்கப்பட்டிருக்கிறது.

நல்ல கிளேஸ்கடிதத்தில் பதிப்பிக்கப்பட்டது புல்கலிக்கோ பயிண்டு செய்தது.

இதன்விலை ரூபா-1.

கடவுள் துணை.

சாரங்கதரனுக்கும் சித்திராங்கிக்கும் தர்க்கம்.

பு. . ரப்பாட்டு.

விருத்தம்.

உன்னிதமாகவேதா னேதினேன் முதற்பாகத்தை
பின்னேயிரண்டாம்பாகம் பேசுவேன்விபரமாக
மன்னியப்புவியிலுள்ளோர் மகிழுடன்படித்துவாழ்க
நன்னயசெஞ்சிபேகாம் பரம்கஷிநல்குவேனே.

சித்திராங்கி சொல்.

ஆசைப்புருவை யெந்தன்
அழகுள்ள மணிப்புருவை
நேசமுடன் வந்ததினி
நான்செய்தபாக்கியமே

கிட்டிநீ-எட்டிவா-இஷ்டப்படிக்கே கொடுப்பேன்
இங்குவந்த வுன்புருவை.

சாரங்கதரன்சொல்

புறுகொடுத்து விட்டால்
புண்ணியமுனக் குண்டம்மா
நரேந்திரர் மகிழும்
நற்குணமே என்சின்னம்மா
அன்னையே-என்னையே-அனுப்பிவைக்கவேணுந்
தடையாகுதிந்த நேரமம்மா.

(சித்) சின்னம்மா என்றுமுறை
சிறுவனேநீ எண்ணவேண்டாம்
உன்புறு வேண்டுமானால்
உகந்துவார்த்தை யாடவேண்டும் கிட்டிநீ

(சார) சிவசிவா யிந்தவார்த்தை
செவிதனிலே கேட்கலாமோ
பாவமதுக் கீடானதொல்லை
பகருவதும் நீதியாமோ அன்னே

(சித்) படத்தி லெழுதிவந்தப்
பாட்சாவைக் கண்டுமிப்போ
விடுக்கமன மில்லையே
வீசுமதன் கணையின்றப்போ கிட்டிநீ

(சார) மாடப்புறு தாருந்தாயே
மைந்தன்வந்து நேரமாச்சு
தேடிதேடி நானலைந்து
ஓடிவந்தேன் பொழுதுபோச்சு அன்னே

(சித்) மாடப்புறு தாரனடா
மனக்கவலை தீர்ப்பாயடா
கோடிதவஞ் செய்தனடா
குழந்தைநீ வந்ததடா கிட்டிநீ

(சார) கூறுன வார்த்தையம்மா
கூறுவது நீதியல்ல
பேறுன இப்புவியும்
பொருப்பதுண்டோ இருப்பதுண்டோ (அ)

(சித்) கூறுன வார்த்தையல்ல
குவலயத்திற் கேற்றதப்பா
சீரான உன்புறுவை
தாரேனிங்கு வாராயப்பா கிட்டிநீ

(சார சுந்திரமுள்ள புறுவை
எந்தன்கையில் நீகொடம்மா
சிந்தையு மிகக்களித்து
சீக்கிரமா போவேனம்மா அன்னே

(சித்) சுந்தரப் புறுவளர்க்கும்
சொகுசுள்ள வசீகரனே
எந்தன்மையல் தீரும்புறு
யிதோதாரேன் வசீகரனே கிட்டிநீ

(சார) கட்டாயமா யிதுவென்ன
கச்சையைப் பிடித்துக்கொண்டாய்

புராப்பாட்டு.

தட்டாதே பின்வருவேன்
சடுதியிலே விளையாடி அன்னே

(சித்) பெற்றபிள்ளை வாய்முத்தமே
பெறுவதற்கு காத்திருப்பார்
முத்தமொழிந்தாய் சரிதான்
முத்தமொன்று தந்துபோடா
சீக்கிரம்-சீக்கிரம்-கேழ்க்கிறதைதந்துவிட்டு
போய்க்கிழித்துப் பெற்றுவாடா.

(சார) முத்தங்கொடுக்கமாட்டேன்
முகமெடுத்துபார்க்கமாட்டேன்
நத்தும்புருவும் வேண்டேன்
நான்போரேன் நீவிடம்மா
இப்படி-இப்படி-என்றுபேச்சுவிளங்கிடும்
என்று நமஸ்காரமம்மா.

(சித்) ஆணழகா வீணிலென்னை
அவதிக்காளாக்கிறாயே
நாணமென்ன கோணமென்ன
நானுமோக மானேனுன்மேல்
சிங்காரகெம்பீரா சங்கீர்தவில்தாரதீரா
சாரங்கதரா வொய்யாரா

(சார) கிட்டகிட்ட வந்தாயென்ன
கெடுமதியிதுதாயே

சட்டத்திற்கு விரோதமாய்
தொட்டிழுக்கின்றாயேபாவம் [ம்
அரகரா-சிவசிவா-அந்தப்பாவத்தைச் சொல்லவேண்டா
வந்திடும் மகாபாதகம்
(சித்) பிரம்மா விதித்தவிதி
பிசகவிடு கிழவனுடன்
சரசமாகயிருபேரும்
சுக்கசுகங்கொள்ளலாமே
இதனால்பாவமாபுண்ணியமா ஒன்றுமில்லை நல்லமுத்தம்
என்றுதந்துபின்போடாநீ
(சார) மிஞ்சினால் கெஞ்சுகிறாய்
கெஞ்சப்போனால் மிஞ்சுகிறாய்
கொஞ்சம்சுகம் யென்தகப்பன்
கொடுப்பதெல்லால் யான்கொடேனே
கத்தியால்கச்சை பத்தியறுத்தோடிவிட்டேன்
மற்றுயென்ன வல்வழக்கு.
(சித்) ஓடுகிறாயோ சண்டாளா
உன்னைநம்பி வந்திருக்க
வாடுகிற வாட்டங்கண்டுநாண
மருந்துவிட்டால்வாழ்வாயே
உன்மாருகால்-மாருகைவாங்குறேன்போடாபோடா
மன்னன்வந்த வுடனேபயலே.
(சார) கைகாலு போனாலுமுன்
கபடுக்குள் நான்படமாட்டேன்

பொய்யான மாய்கைக்குள்ளே
பிடிபட்டு அலையமாட்டேன்
உண்மையே-தண்மையே-ஓதினேனம்மாயம்மா
பாதையை யழிதேனம்மா.
(சித்) கல்வியெல்லாம் படிக்குறாய்நீ
காளேயடா பயலே
பொல்லாத பாதைநீயும்
பட்டுழல செய்தேன்போடா
ஆகட்டும்அடபயலே அறுத்திடவுமுன்னைசெய்வேன்
சரத்ததுவும் நான்முடிப்பேன்,
(சார) தெய்வமொன்று மேலிருக்க
தெண்டனைகள் கண்டதுண்டோ
வைசயோகங் தெரியாத
முத்துசாமிதமிழ் சாக்ஷியுண்டு
செய்வதைசெய்வேனே சீரிலாதநாரிபோடி
போடிநீர் மூடிபோடி

விருத்தம்.

போதவேபுரூவைத்தேடி போனசாரங்கதாரன்
பாதைசித்திராங்கிகையிற் பட்டவன்மீண்டுவந்து
வேதனையாகவந்து விளைந்தயாவுஞ்சொல்லி
தோதகமாய்மனைக்குத் துலங்கவேசென்றிட்டாரே.

புராப்பாட்டு இரண்டாம்பாகம்
முற்றிற்று.